




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (08.02.2026) துறைமுகம் சட்டமன்ற தொகுதி, இராயபுரம் மண்டலம், வால்டாக்ஸ் ரோடு, வ.உ.சி. சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, சார்பில் ரூ.13.56 கோடி மதிப்பீட்டில் குளிர்சாதனம் மற்றும் பல்வேறு சிறப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றி அழகன் (வில்லிவாக்கம்), ஜோசப் சாமுவேல் (அம்பத்தூர்), துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் பி. ஸ்ரீராமுலு, திருமதி சரிதா மகேஷ்குமார் பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை – துறைமுகம் தொகுதியில் – ரூ.13 கோடியில் புதிய திருமண மண்டபம்!

# அரசின் திட்டங்கள் எல்லாம் தொடர, அரசுக்கும், கழகத் தலைவருக்கும் ஆதரவாக இருங்கள்!

## ‘முதல்வர் திருமண மாளிகை’யைத் திறந்து வைத்து – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,பிப்.10-**

**சென்னை துறைமுகம் தொகுதி, வ.உ.சி. சாலைப் பகுதியில் ரூ.13 கோடி மதிப்பில், முதலமைச்சர் அவர்களின் பெயரில் கட்டப்பட்டுள்ள புதிய திருமண மண்டபத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``அரசின்திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி. எனவே, இந்தத் திராவிட மாடல் அரசு தொடர, நீங்கள் அனைவரும் இந்த அரசுக்கும், கழகத் தலைவருக்கும் ஆதரவாக இருக்க வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.**

**விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இந்தத் திருமண மண்டபம், ஏழை எளிய நடுத்தர மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்கள் குறைந்த கட்டணத்தில் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், நிறைவான வசதிகளோடு கட்டப்பட்டு இருக்கிறது. இந்தத் திருமண மாளிகையை பொதுமக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

### திருமண மாளிகை

சென்னை மாநகராட்சியின் சார்பாக 13 கோடி ரூபாய் செலவில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெயரில் கட்டப்பட்டுள்ள இந்தத் திருமண மாளிகையைத் திறந்து வைத்து, 10 இணையர்களுக்குத் திருமணம் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கின்ற மணமக்களுக்கு நம் அனைவரின் சார்பாகவும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

### 5,000 இணையருக்குத் திருமணம்

இந்த நிகழ்ச்சிக்காக அண்ணன் சேகர்பாபு அவர்கள் என்னிடத்தில் தேதி கேட்கும் பொழுது, திருமண மண்டபத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்றுதான் தேதி வாங்கினார். அதன் பிறகுதான் சொன்னார், திருமண மண்டபம் மட்டுமல்ல, அந்த மண்டபத்தைத் திறந்து வைத்து, 10 இணையர்களுக்கு நீங்களே திருமணத்தையும் நடத்தி வைக்க வேண்டும் என்று உரிமையோடு சொன்னார். அதனால்தான் சேகர்பாபு அண்ணனைப் பார்க்கும் பொழுது, அவர் அறநிலையத்துறை அமைச்சரா அல்லது அன்பு நிலையத் துறைக்கு அமைச்சரா என்று கேட்பது வழக்கம். அந்த அளவுக்கு இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், அவரின் துறையின் சார்பாக 5,000 இணையர்களுக்குத் திருமணத்தை நடத்தி வைத்திருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அதற்கு அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

நம்முடைய அரசின் சார்பாக கலைஞர் பெயரில், அம்பேத்கர் அவர்கள் பெயரில் திருமண மண்டபங்களைத் திறந்து வைத்திருக்கிறோம். இன்று முதன்முறையாக நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பெயரில் இந்தத் திருமண மண்டபத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பை அண்ணன் சேகர்பாபு அவர்கள் எனக்குத் தந்திருக்கிறார்.

### உங்களுக்கே தெரியும்

முந்தைய 10 ஆண்டு கால ஆட்சியில், இந்த வடசென்னை பகுதி எப்படி இருந்தது, இந்த ஐந்து ஆண்டு கால நம்முடைய திராவிட மாடல் அரசில் எந்த அளவுக்கு வடசென்னை முன்னேறியிருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. இங்கே வந்திருக்கின்ற பொதுமக்களாகிய உங்களுக்கே தெரியும். வடசென்னையை வளர்ந்த சென்னையாக மாற்ற வேண்டும் என்று சுமார் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை’ நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இதுபோன்ற பொதுமக்களுக்குப் பயன்படுகின்ற திருமண மண்டபங்களைக் கட்டித் திறந்து வைத்திருக்கிறோம்.

இதைத் தொடர்ந்து வடசென்னை பகுதியில் பேருந்து நிறுத்தங்கள், படிப்பகங்கள் என்று ஏராளமான கட்டமைப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இங்கு திறக்கப்படுகின்ற திருமண மண்டபம், வடசென்னை மக்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். இந்தத் திருமண மண்டபத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை, நீங்கள் நடத்திக்கொள்ளலாம்.

குறைந்த கட்டணம் என்பதால், வசதி குறைவாக இருக்கும் என்று யாரும் தப்புக் கணக்கு போட்டுவிடக் கூடாது. ஒரு தனியார் திருமண மண்டபம் எந்த அளவுக்கு மிகச்சிறப்பாக, பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்குமோ, அதேபோல் இந்தத் திருமண மண்டபத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அண்ணன் சேகர்பாபு மூலமாக உங்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ளார்.

### மகளிருக்கான அரசு

இந்தத் திருமண மண்டபத்தில் எல்லா வசதிகளும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நம் அரசு அமைந்ததிலிருந்து நம் முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான அரசாக நடத்தி வருகிறார்கள். அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இட்ட முதல் கையெழுத்து விடியல் பயணத் திட்டத்திற்குத்தான். கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் இது வரை 960 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பயனளிக்கும் வகையில், காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார். 22 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்.

அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் ‘புதுமைப்பெண்’ திட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தின் வாயிலாகக் கல்வி ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் 1 கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி. மீண்டும் நம்முடைய கழகத் தலைவர்தான் முதலமைச்சர் நாற்காலியில் அமரப்போகிறார். எனவே, திராவிட மாடல் 2.0 தொடரப்போகிறது. இந்தத் திராவிட மாடல் அரசு தொடர நீங்கள் அனைவரும் இந்த அரசுக்கும், கழகத் தலைவருக்கும் ஆதரவாக இருக்க வேண்டும்.

### காதல் திருமணம்

இன்று இல்வாழ்க்கையில் இணைந்திருக்கின்ற மணமக்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள். ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையை நடத்துங்கள். உங்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய இடத்தில் நிலைநாட்டிக்கொள்ளுங்கள். எங்கெல்லாம் விட்டுக்கொடுக்க வேண்டுமோ அங்கெல்லாம் விட்டுக்கொடுங்கள்.

எனக்கு அருகில் இருக்கின்ற அந்த இணையரைப் பார்த்துப் பெயர் கேட்டேன். சக்திவேல் பூங்கொடி. ``பூங்கொடியை எங்கே பார்த்தீர்கள்?” என்று கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், ``இல்ல அண்ணே, இது காதல் திருமணம், மூன்று வருடப் பழக்கம்” என்றார். இங்கே எத்தனை பேர் காதல் திருமணம்? கூடுதல் மகிழ்ச்சி, ஏனென்றால் நானும் காதல் திருமணம்தான் செய்து கொண்டேன்.

மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். திருமணத்திற்குப் பிறகு உங்களுடைய குழந்தைகளுக்கு அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் சேகர்பாபு, பரிமளம், நவீன், பரிதி இளம்சுருதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, நரேந்திரன், பகுதி செயலாளர்கள் முரளி, ராஜசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், சந்துரு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், வட்டக் கழகச் செயலாளர் ராமமூர்த்தி, ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், தமிழ்வேந்தன், புழல் நாராயணன், கன்னிகை ஸ்டாலின் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.




அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் பகுதி பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஆண்டிமடம் முதல் சென்னை வரை (வழி: ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம்) செல்லும் புதிய அரசு விரைவு போக்குவரத்து கழக Ultra Deluxe பேருந்து சேவையை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆண்டிமடம் பேருந்து நிலையத்தில் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் மோகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர். கலியபெருமாள், ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் இரா.செந்தில்குமார் மற்றும் திருமுட்டம் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள, அரசு விரைவு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



சேலம் மாநகரம் கோட்டை பகுதியில் உள்ள 31 வது கோட்டத்தில் அ.தி.மு.க., த.வெ.க கட்சியைச் சேர்ந்த 250 பேர் அக்கட்சியை விட்டு விலகி. சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர். அமைச்சர் இரா. இராஜேந்திரன் முன்னிலையில் தி.மு.க. வில் இணைந்தனர். உடன் பகுதி கழக பொறுப்பாளர் இப்ராகீம், கோட்டச் செயலாளர் அப்துல் ரசாக், நிர்வாகிகள் சாகுல், இக்பால், ஜாபர், பைசுல்லா ரஹமத்துல்லா, ரத்தினசாமி, நஜீப், பாபு, அலி ஜான், சுஹைல் முத்து நகை, நாகராஜ் ஆண்டவர் பாபு, சுண்ணம்மா ஆகியோர் உள்ளனர்.